| | | |
|---|---|---|
| வலயக்கல்விஅலுவலகம் - யாழ்ப்பாணம் | | |
| இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018 | | |
| தரம் - 06 | வரலாறு | நேரம் :- 2 மணித்தியாலம் |

## பகுதிI

❖ **மிகச்சரியானவிடையின் கீழ்க் கோடிடுக.**

01) பொலன்னறுவைக் கல்விகாரையை அமைப்பித்த மன்னன்.
1) மகாசேனன் 2) தாதுசேனன் 3) தேவநம்பியதீசன் 4) முதலாம் பராக்கிரமபாகு

02) புராதன காலத்தில் கீழ்த்தேசங்களின் தானியக் களஞ்சியம் என அழைக்கப்பட்ட நாடு.
1) இந்தியா 2) சீனா 3) இலங்கை 4) தாய்லாந்து.

03) மொசப்பத்தேமிய மக்கள் பயிரிட்ட முக்கியமான தானியங்கள்.
1) நெல்,பயறு 2) சாமை,குரக்கன் 3) கோதுமை,பார்லி 4) உழுந்து,தினை

04) எரிமலைகள் வெடிக்கும் போது அதிலிருந்து வெளியே வரும் குழம்பிற்கு வழங்கப்படும் பெயர்
1) லாவா 2) அடையல்கள் 3) கனியங்கள் 4) சேறு.

05) ஒபபீனியா என்ற கடல் வாழ் உயிரினத்தின் படிமம் கண்டெடுக்கப்பட்ட நாடு.
1) எதியோப்பியா 2) பிறேசில் 3) பிரான்ஸ் 4) கனடா

06) மனிதர்கள் வேட்டையாடுவதற்குப் பதிலாக விவசாயம் செய்யத் தொடங்கிய யுகம்.
1) பெரும்பனியுகம் 2) சிலூரியன் யுகம்.
3) ஹொலோசின் யுகம் 4) பிளைத்தோசீன் யுகம்.

07) மனிதன் முதன் முதல் நெருப்பைப் பயன்படுத்தியமைக்கான சான்று கண்டெடுக்கப்பட்ட நாடு.
1) சிரியா 2) இஸ்ரேல் 3) எகிப்து 4) மெக்சிக்கோ.

08) ஆபிரிக்கக் கண்டத்தில் வாழும் மனித வர்க்கத்தினர்.
1) மொங்கோலொயிட் 2) நீக்ரோயிட்
3) ஒஸ்ரிலொயிட் 4) கொக்கசொயிட்.

09) மொசப்பத்தேமிய நாகரிகம் தோன்றி வளர்ந்த பிரதேசம் தற்போது அமைந்துள்ள நாடு.
1) ஈரான் 2) ஈராக் 3) பாகிஸ்தான் 4) இந்தியா.

10) சீனர்களால் உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்ட கண்டுபிடிப்புக்கள்
1) திசையறிகருவி,வெடிமருந்து 2) கடதாசி, இறப்பர் பந்து.
3) அச்சியந்திரம்,படகு 4) சட்டக்கோவை,எழுத்துக்கலை.

11) உலகின் மிகப் பெரிய பழைமை வாய்ந்த இலக்கிய நூலை எழுதியவர்.
   1) கில்கமேஷ் 2) ஹோமர் 3) மாக்கியவல்லி 4) தாந்தே.

12) எகிப்திய நாகரிகத்திலிருந்து உலகிற்குக் கிடைத்த சிறந்த கொடை.
   1) எழுத்துத் தொகுதி 2) சட்டக் கோவை
   3) நகரநிர்மாணம் 4) பிரமிட்டுக்கள்.

13) சிறிசத்துவபுர, லங்காபுர நகரங்களில் வாழ்ந்த ஆதிக் குடிகள்.
   1) நாகர் 2) இயக்கர் 3) வேடர் 4) ஆரியர்

14) இலங்கையில் முதன் முதலில் குடியேற்றங்களை நிறுவிய ஆரியர் குழு.
   1) பண்டுவாசுதேவனும் குழுவினரும் 2) மதுராபுரி இளவரசியும்,குழுவினரும்
   3) விஜயனும்,தோழர்களும் 4) பத்தகச்சனாவும்,குழுவினரும்

15) புராதன காலத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்ட பெயர்களில் ஒன்று.
   1) சீயம் 2) செரண்டிப் 3) தம்மதீப 4) பாரதம்

16) விஜயன் இலங்கையில் வந்திறங்கிய இடம்.
   1) கோகர்ண 2) தம்பபண்ணி 3) மாதோட்டம் 4) மகாகம

17) எமது நாட்டில் மக்கள் வாழந்த ஆரம்ப யுகம்.
   1) கற்காலம் 2) பெரும்பனிக் காலம் 3) சிலூரியன் காலம் 4) ஹொலோசின் காலம்.

18) அநுராதகமவை அநுராதபுர நகரமாக மாற்றிய மன்னன்.
   1) தேவநம்பியதீசன் 2) மூத்தசிவ
   3) பண்டுகாபயன் 4) பண்டுவாசுதேவன்.

19) விஜயனுடன் வந்தகுழுவினர் குடியேற்றங்களைஅமைத்துக் கொண்ட நதிக்கரையோரங்களில் ஒன்று.
   1) ஜின்கங்கை 2) களனிகங்கை 3) கலாஓயா 4) கனகராயன் ஆறு

20) இலங்கையில் முதன்முதல் நகரின் அருகில் குளமொன்றை அமைத்த மன்னனும், அவனால் கட்டுவிக்கப்பட்ட குளமும் முறையே.
   1) வசபன்,மயெந்திக் குளம் 2) தாதுசேனன்,கலாவாவி
   3) மகாசேனன்,மின்னேரியாக் குளம் 4) பண்டுகாபயன்,அபயவாவி.

(40 புள்ளிகள்)

## பகுதிII

- முதலாம், இரண்டாம் வினாக்கள் கட்டாயமானது.
- ஏனையவற்றுள் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

*01)*

1) வரலாறுபாடத்தில் இரண்டாம் தவணையில் உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீட்டு வகையைப் பெயரிடுக. *(2 புள்ளி)*
2) அக் கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்த பாட அலகைக் குறிப்பிடுக. *(2 புள்ளி)*
3) மேற்படி கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்கள் இரண்டினைத் தருக. *(2 புள்ளி)*
4) அக் கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்தால் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் மூன்று தருக. *(3 புள்ளி)*
5) கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்வது தொடர்பாக ஆசிரியர் வழங்கிய ஆலோசனைகள் இரண்டு தருக. *(3 புள்ளி)*

02) பின்வரும் அம்சங்கள் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைத் தரப்பட்ட உலகப் புறவுருவப் படத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

1) ஆபிரிக்கா
2) சீனா
3) வடஅமெரிக்கா
4) இலங்கை
5) அவுஸ்ரேலியா
6) இந்தியா
7) ஐரோப்பா
8) ரஷ்யா.




*(12 புள்ளிகள்)*

*03)*

1) இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்குஉதவும் மூலாதாரங்கள் மூன்றுதருக?*(3 புள்ளி)*
2) வரலாற்றைக் கற்பதனால் கிடைக்கும் பயன்களில் மூன்றைஎழுதுக? *(3 புள்ளி)*
3) பின்வரும் நிகழ்வுகளைஅடிப்படையாகக் கொண்டுகணிக்கப்படும் ஆண்டுகளைப் பெயரிடுக
   1. கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பிற்பட்டகாலம்.
   2. புத்தபெருமான் பரிநிர்வாணமடைந்தநாள் தொடக்கம் கணிக்கப்படும் ஆண்டு.
   3. முகமதுநபிஅவர்கள் மக்காவைவிட்டுமதீகாவுக்குச் சென்றஆண்டு.

   *(3 புள்ளிகள்)*
4) இலங்கையில் வேட்டையுகத்தில் வாழ்ந்தமனிதன் பின்வரும் தேவைகளைப் பூர்த்திசெய்தவிதத்தைக் குறிப்பிடுக.
   1. வாழ்விடம் :
   2. உட்கொண்டஉணவுகள் :
   3. பயன்படுத்தியஉபகரணங்கள் : *(3 புள்ளிகள்)*

04)

1) ஆதிமனிதன் பயன்படுத்திய ஆயுதங்களின் தன்மைக்கேற்ப மனிதனது கலாசார வளர்ச்சிக் கால கட்டங்களைப் பெயரிடுக?

(3 புள்ளிகள்)

2) புதிய கற்காலத்தில் மனிதன் அடைந்த வெற்றிகள் மூன்றைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

3) பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புபட்ட மனித பரிணாம இனங்களை அடைப்புக் குறிக்குள்ளிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

   1. ஆற்றலுடையமனிதன் :
   2. முதன் முதல் நெருப்பைஉபயோகித்த மனிதன் :
   3. மனிதனது நிலையை அடைந்த வானரம் :

   (ஒஸ்ரலோபிதிகஸ்/ ஹோமோசேபியன்/ ஹோமோஹெபிலஸ்/ஹோமோ இரெக்டஸ்)

(3 புள்ளிகள்)

4) கீழே தரப்பட்ட தானியங்களை முதன்முதல் பயிரிட்ட நாடுகளைத் தருக?

   1) நெல் :
   2) கோதுமை :
   3) சோளம் : (3 புள்ளிகள்)

05)

1) மொசுப்பத்தேமிய நாகரிக காலமக்கள் ஈடுபட்ட தொழில்கள் மூன்றைக் குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

2) சிந்துநதிநாகரிக காலநகரங்களின் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

3) பின்வரும் சின்னங்களுடன் தொடர்புடைய நதிக்கரை நாகரிகங்களைத் தருக

   1. ஆப்புவடிவிலானஎழுத்து :
   2. விளையாட்டுமண்வண்டி:
   3. நெப நெபவுட்டேன் அரசி : (3 புள்ளிகள்)

4) மொசப்பத்தேமிய மக்களால் பின்வரும் விடயங்களுக்குரிய அதிபதியாகக் கருதப்பட்ட கடவுளரைக் குறிப்பிடுக.

   1) கடவுள் குழுவின் தலைவன் :
   2) காற்றுக்கும் விவசாயத்திற்கும் அதிபதி :
   3) பூமிக்குஅதிபதி: (3 புள்ளிகள்)

06)

1) புராதனகாலத்திலிருந்தே இலங்கைபிரசித்திபெற்றநாடாகவிளங்குவதற்கான இரு சான்றுகளைக் குறிப்பிடுக?

2) விஜயனுடன் வந்தகுழுவினரால் அமைக்கப்பட்டகுடியேற்றங்களில் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றை அமைத்தவர்களின் பெயர்களைத் தருக? (3 புள்ளிகள்)

படம் A



3)

   i) படம் A யில் குறிப்பிடப்படும் நிகழ்வு யாது?

   ii) இந்நிகழ்வினைப் பற்றிக் குறிப்பிடும் வரலாற்றுநூலினைப் பெயரிடுக?

   iii) படத்தில் குறிப்பிடப்படும் பெண் ஈடுபட்டிருந்த தொழிலைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

4) பண்டுகாபய மன்னன் அநுராதகமவை அநுராதபுர நகரமாக மாற்றுவதற்கு முன்னெடுத்த திட்டமிடல் நடவடிக்கைகளில் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)